# சட்டத்துறை

## அறிவிப்புகள்

## 2018–19

1. **தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கென புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டுதல்.**

2017–2018–ஆம் கல்வியாண்டில் புதிதாக துவக்கப்பட்ட தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கென, தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டத்தில் ரூ.77.07 கோடி மதிப்பீட்டில் மாணவ மற்றும் மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டப்படும்.

**2. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிக்கு கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டுதல்.**

கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பட்டமளிப்பு விழா மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் சுமார் 4254 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.10.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். இதன் மூலம் 1440 மாணவர்கள் பயன்பெறுவர்.